ஜெம்ஸ் சத்தம்

Since 1972

ஏப்ரல் 2020

இஸ்ரவேலே,
நீ உனக்குக்
கேடுண்டாக்கிக்
கொண்டாய்;
ஆனாலும்
என்னிடத்தில்
உனக்குச் சகாயம்
உண்டு.

ஒசியா 13:9

ஊழியர் பயிற்சி நேபாள்

ஜெம்ஸ் சத்தம்

GEMS Satham

Transforming Peoples to Transform Nations

அன்பின் மடல் - 2
சகோ.D.அகஸ்டின் ஜெபக்குமார்

சகாயம் செய்யும் தேவன் - 10
'Lead Next' தலைமைத்துவப் பயிற்சி - 12
பணித்தள மருத்துவ ஊழியங்கள் - 13
ஊழியர் உபவாசக் கூடுகை - நேபாள் - 16
பணித்தளச் செய்திகள் - 18
முன்னேற்றப் பணி முகவரிகள் - 29

Published by

GEMS Educational and Media Services
14/1, Jeba Nagar, Vasanthapuram South,
Near Vijaya Garden, Tirunelveli 627005
Ph. : 9488771655
E-Mail : media@gemsbihar.org

Published for

Gospel Echoing Missionary Society
11, 13th Cross Street, New colony
Chrompet, Chennai - 44
Ph. : 044-22386031, 044-22380295

Field office

GEMS, Sikaria, Indrapuri - 821308
Rohtas Dist., Bihar , Ph. : 06184 - 234567
(Railway station & courier centre : Dehri on Sone)
Website : www.gemsbihar.org
E-mail : gems@gemsbihar.org

'ஜெம்ஸ்' என்பது,

Gospel Echoing Missionary Society

விசுவாச இளைஞர்கள் சிலரால் 1972-ம் ஆண்டு நிறுவப்பட்டு, 1979-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஓர் ஊழியம்.

பீஹார் மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் உள்ளோரைச் சந்திப்பதே இவ்வூழியத்தின் பிரதான தரிசனம். அத்துடன், ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் பணியினையும், திருச்சபைகளை ஸ்தாபிக்கும் பணிகளையும் தொடர்ந்து செய்துவருகின்றது. பீஹார், ஜார்க்கண்ட், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மற்றும் மஹராஷ்டிரா மாநில மக்களுக்கு நற்செய்தியினை அறிவிப்பதுடன், அண்டை நாடுகளில் நடைபெறும் ஊழியங்களையும் ஊக்குவித்துவருகின்றது. ஆதிவாசி மக்களைச் சந்திப்பது, குழந்தைத் தொழிலாளர்கள், ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோரை மறுவாழ்வு மையங்களில் ஆதரிப்பது, மருத்துவ சேவை அளிப்பது, கல்வியினால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது போன்ற ஊழியங்களால் உன்னதரை உலகிற்கு அறிவித்துவரும் ஓர் மிஷனரி ஊழியம்.

அன்பின் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான ஜெபப் பங்காளரே,

தம்முடைய வார்த்தையினால் நம்மை உயிர்ப்பிக்கிற ஆண்டவருடைய நாமத்தில் வாழ்த்துக்கள் (சங். 119:93). நம்மைச் சுற்றி நடக்கின்ற அனைத்து காரியங்களும் பொதுவாழ்விலோ (மத ரீதியாக, மன ரீதியாக, அழிவு ரீதியாக, சட்ட திட்ட ரீதியாக), தேசிய மற்றும் சமூக வாழ்விலோ, அரசியல் உலகிலோ, நம்முடைய **அன்றாட வாழ்க்கையை வெகுவாகப் பாதித்து, செயலற்றவர்களாக மாற்ற வல்லவைகளாக மாறிவருகின்றன. சோர்வுகள் நம்மை மேற்கொண்டு, செய்யவேண்டியவைகளையும் செய்யக்கூடாதபடி** மாற்றிவிட போதுமான பலமுள்ளவைகளாய் இருக்கின்றபடியால், தேவ வார்த்தைதான் நம்மை உயிர்ப்பித்து, நிமிர்ந்து நடக்கச் செய்யமுடியும் என்பது உண்மை.

“பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம்.

இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்து பார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்” என்று இயேசுவும் சொன்னாரே. (லூக். 21:26,28)

தலைநகர் டெல்லி கலவரத்தினால் உண்டான பின் விளைவுகள், கரோனா வைரஸின் தாக்கத்தினால் **உலகினையே ஆட்டிப்படைக்கும் அங்கலாய்ப்புகள்** மற்றும் பொருளாதாரத் தேக்கம் போன்றவைகள் தலைவர்களையும் அசைத்துக்கொண்டிருப்பது நாம் அறியாதவைகள் அல்லவே!

ஒரு கொள்ளை நோய் பல ஆயிரங்களை அள்ளிக்கொண்டு போவதனையும், தேசங்களை கலங்கடிக்கக் கூடியதனையும் நாம் நேருக்கு நேர் கண்டுவருகிறோம். **எத்தனைதான் தொழில்நுட்பங்கள், விஞ்ஞான அறிவு மற்றும் மருத்துவக் கண்டுபிடிப்புகள் இருந்தாலும், அவை அனைத்தும் ஸ்தம்பித்து நிற்கும் கொடூரத்தினை ஒரு சின்ன வைரஸினால் நடக்கப்பண்ணக் கூடுமே!**

மோட்டார் வாகனங்களைத் தயாரிக்கும் நிறுவனமும் மூடப்படக்கூடிய அளவுக்கு அதின் தாக்கம் பெரியது; விமான சேவைகள் பாதிக்கப்படக்கூடிய அளவு அதற்கு வல்லமை உண்டு என்பது தெளிவு. இந்த நேரத்தில் கர்த்தரின் பிள்ளைகளை உள்ளடக்கிய சபை எப்படி செயல்படுவது? என்பது உண்மை தேவப் பிள்ளைகளின் கேள்வி.

தேவன் தன்னுடைய "நீதியைச் சரிக்கட்டும் நாட்கள்" என்று (லூக். 21:22) கூறி **வாளாதிருப்பதா?** அல்லது, ஆபிரகாம், மோசேயைப் போல **கெஞ்சி நிற்பதா?** என்ற குழப்பம் அநேகருக்குள் உண்டு. (ஆதி. 18:23-33; சங். 106:23)

அதே நேரத்தில், தேவன் தேசத்தில் தண்டனையை நிறைவேற்ற தீவிரம் காட்டுகையில், "நீ இந்த ஜனத்துக்கு நன்மையுண்டாக விண்ணப்பம்பண்ணவேண்டாம். அவர்கள் உபவாசித்தாலும், நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பதில்லை; அவர்கள் தகனபலிகளையும் காணிக்கைகளையும் செலுத்தினாலும், நான் அவர்கள் மேல் பிரியமாயிருப்பதில்லை; பட்டயத்தினாலும் (கலவரம்), பஞ்சத்தினாலும் (பொருளாதார தாக்கம்), கொள்ளைநோயினாலும் நான் அவர்களை நிர்மூலமாக்குவேன்" (எரே. 14:11,12) என்று சூளுரைக்கிற **ஆண்டவரின் சத்தம் நம்மை நடுங்கப்பண்ணுகிறதே.**

“மோசேயும் சாமுவேலும் என் முகத்திற்கு முன்பாக நின்றாலும் என் மனம் இந்த ஜனங்கள் பட்சமாய்ச் சாராது” (எரே. 15:1) என்று சொல்லிவிடுவாரோ? அல்லது நோவாவும் தானியேலும் யோபும் அதின் நடுவில் இருந்தாலும், அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களை மாத்திரம் தப்புவிப்பார்களேயல்லாமல், குமாரனையாகிலும், குமாரத்தியையாகிலும் தப்புவிக்கமாட்டார்கள் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்பதைக் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று எசேக்கியேல் தீர்க்கதரிசியின் நாளில் உரைத்தது போல் நடந்துவிடுமோ? என்ற ஐயம் உண்டு. (எசே 14:20)

எரேமியாவும், எசேக்கியேலும் அன்று தேவ மக்கள் என்று கூறப்பட்ட இஸ்ரவேலுக்கு எதிராகவே தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். தேவ ஜனத்தோடு தொடர்புடைய நாடுகளுக்கும் பின்னதாக அழிவே காத்திருந்தது. இந்த நேரத்திலும், தேசத்தின் பாவத்தின் நிமித்தம் நடப்பவை நமக்கும் எச்சரிக்கை தரப் போதுமானது.

ஆனால், **இன்று திருச்சபையின் உள் நிலமை பரிதாபத்திற்குரியது. இளைஞர்களை இன்பத்திற்கு நேராக அழைத்துச் செல்லும் ஆடம்பரப் பிரியர், ஆராதனை என்ற பெயரில் அடிக்கும் கூத்து ஒருபுறம். ஆசை வார்த்தைகளையே பேசி, அதுவே ஆண்டவர் வைத்திருக்கும் ஆசீர்வாதப் பெட்டகம் என அயர்ந்த நித்திரையை உண்டாக்கக்கூடிய சாரமற்றதும், சத்துவமில்லாததுமான வாக்குத்தத்த பிரசங்கங்கள், அரசியல் ஆதாயத்திற்காக அலைந்து திரியும் ஒரு பெரும் கூட்டம், சபையின் ஆஸ்திகளைச் சுரண்டத் துடிக்கும் கழுகுகளின் திரள் கூட்டம், மறுபுறம் பேதை ஜனங்களை திக்குமுக்காட வைக்கும் ஆவியானவரின் பெயரால் நடத்தப்படும் போதனைகள்**. இவைகள் எல்லாம் உலகத்தினின்று பிரித்து எடுக்கப்பட்ட சபைக்குள் எப்படி வந்தது என்ற பெரிய கேள்வி நம்மை பிடிக்கிறது.

இயேசு சொன்னார், “பரலோகராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. மனுஷர் நித்திரைபண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான்.

பயிரானது வளர்ந்து கதிர்விட்ட போது, களைகளும் காணப்பட்டது. வீட்டெஜமானுடைய வேலைக்காரர் அவனிடத்தில் வந்து: ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா? பின்னை அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள்.

அதற்கு அவன், "சத்துரு அதைச் செய்தான்" என்றான். (மத். 13:24-27)

"சத்துருவின் கிரியைகள் சபையின் நடுவிலேயா? ஆம் சபைக்கு வரவேண்டிய சத்துவத்தை உறிந்து எடுத்து, பயிரைக் காட்டிலும் அதிவேகமாக வளரும் களைகள் இன்று ஏராளம். பயிருக்குப் பாய்ச்சப்பட்ட தண்ணீரையே திருட்டளவாய் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்ட களை அது. கொடுக்கப்பட்ட நோக்கம் வேறு, ஆனால் நடப்பது வேறொன்று.

இதிலிருந்து ஒன்றை நாம் தெளிவாக அறியக்கூடும். பார்ப்பதற்கு களையும் பயிரும் ஒன்று போலவே காணப்படும். குடிப்பதுவும் ஒரே நீரையே, உண்பதுவும் ஒரே ஆகாரத்தையே, நிற்பதும் ஒரே இடத்திலேயே, பாதுகாப்பும் ஒரு வேலையாளினாலேயே"

ஆனால், **இரவோடு இரவாக** மனிதர் நித்திரைபண்ணும் நேரத்தில் நடந்த ஒன்றுதான் விரயமற்றுப்போகப்பண்ணிற்று; அது எஜமானையும் துக்கப்படுத்தியிருக்கவேண்டுமே.

ஒரு மனிதனுக்கு தேவனே நித்திரை கொடுப்பாரெனில், ஆதாமுக்கு ஏற்ற துணையாக ஏவாள் கிடைத்துவிடுவாள் (ஆதி. 2:21). ஆனால், சில வேளைகளில் ஆபிரகாமைப் போன்று கர்த்தருடைய ஏற்றுக்கொள்ளுதலுக்கு காத்து, தவித்து, நம்மை காரிருளும், திகிலும், ஏக்கமும், ஏமாற்றமும் சூழும்போது, நம்மை அறியாமலேயே நாம் நித்திரைகொள்ள நேரிடலாம்.

அந்த சூழ்நிலையை தேவன் பயன்படுத்துகிறார். ஆதாமுக்கு தேவனால் வந்தது நித்திரை; ஆனால், ஆபிரகாமுக்கோ, நான் மேற்சொன்ன காரியங்கள் (திகில், காரிருள், ஏக்கம், ஏமாற்றம் போன்றவை) களைப்படையச் செய்துவிட்டன. ஆனால், அப்படிப்பட்ட சூழ்நிலையினைப் பயன்படுத்தி, தேவன் தன்னுடைய வருங்காலத் திட்டங்களை அறிவிக்கிறார் அல்லது வெளிப்படுத்துகிறார்.

அடிமைத்தனம், உபத்திரவம், நியாயத்தீர்ப்பு, ஆசீர்வாதம், போன்றவற்றினை உள்ளடக்கிய ஒரு வெளிப்பாடு அது. நானூறு ஆண்டு காலத் திட்டம் அது. காரணத்தையும் தேவன் கூறாமல் விடவில்லை (எமோரியருடைய அக்கிரமம் நிறைவாகவில்லை) (ஆதி. 15:12-16). எனவே, உறுதியாகச் சொல்லமுடியும், தேவன் பயன்படுத்திய நித்திரை இது. தேவன் பயன்படுத்தியதினால் அது ஆபிரகாமுக்குத் தலைமுறை தலைமுறையான ஆசீர்வாதத்தினையே வழங்குகிறது. இது யாக்கோபின் வாழ்க்கையிலும் பொருந்தும்.

ஆனால், **எலியாவின் நித்திரையோ மாறானது**; எதிர்ப்பு, எதிர்பார்த்த மாற்றங்கள் நிலைக்கமாட்டாது போனவை (ஜனங்கள் ஆர்ப்பரித்தது உண்மை; ஆனால், செயலில் (பாகால் வணக்கம்) மாற்றம் ஏற்படவில்லையே), தன்னைப்போல வைராக்கியம் கொண்ட மற்றவர்களைக் காணக்கூடாதபடி எலியாவை மாற்றியிருந்த மனதின் துக்கம், சாகவேண்டும் என்ற தவறான ஆசையைக் கொண்டுவந்து செய்யவேண்டிய அல்லது முடிக்கவேண்டிய பணிதனைக் குறித்த கரிசனையற்ற நிலைக்குத் தள்ளிவிட்டு அவனை உறங்கப்பண்ணியது. (1 இராஜா. 19:5)

தூதனின் அப்பமும், தண்ணீரும் கூட அவனை முடங்கியே படுக்கவைத்துவிட்டது. இது **அவனே வரவழைத்துக்கொண்ட நித்திரை**. தவறான மனநிலையிலிருப்பவன் இதைத்தான் செய்வான்.

அந்தச் சோர்புடையவனின் நித்திரையையும் தேவன் தனக்கு சாதகமாக்கிக்கொள்கிறார். வல்லமை மிகுந்த ஒரு ஆசகேல், வைராக்கியமிக்க ஒரு யெகூ, இரட்டிப்பான வரம் கொண்ட ஒரு எலிசா எழுப்பப்படுகிறார்கள். ஆம், **அவர் யோசனையில் பெரியவர், செயல்களிலே வல்லவர்**.

ஆனால், சிம்சோனின் நித்திரையோ, தெலீலாளினால் உருவாக்கப்பட்ட ஒன்று (நியா. 16:19). இன்றும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும், சத்துருவின் கிரியைகளுக்கு சாவு மணி அடிக்க அபிஷேகிக்கப்பட்டதும், ஜனத்தினை அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்க ஆட்கொள்ளப்பட்டதுமான சபைக்கு, நித்திரையை

உண்டுபண்ண வைப்பது **உலகமாகிய தெலீலாக்களும் அவளுடைய ஆட்களுமே**.

கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொண் டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல. சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே. ஆகையால், அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரனுடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே. (2 கொரி. 11:13-15)

சத்துருவின் கையில் உள்ள விதையை அடையாளம் காண்பது எளிதாய் இருக்காமல் போகலாம்; ஆனால், விழிப்புடன் இருந்தால் அவனை விதைக்கவிடாமலேயே செய்துவிட முடியுமே. அவன் விதைத்த பின் அதனை அழிக்கவும் அதனை பொறுக்கவும் கூடாதே.

ஜெபத்தில் விழித்திருப்பது என்பது இதனைக் குறிக்காதோ? **ஜெபம் என்னில் பெருகும்போது, என்னில் விழிப்புணர்வும் பெருகும்**. விழிப்பு விழிப்புணர்வையே குறிக்குமல்லவா!

நித்திரையை விட்டு எழுந்திருக்கத் தக்க வேளையாயிற்றென்று நாம் காலத்தை அறிந்தவர்களாய் இப்படி நடக்கவேண்டும். நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும், இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது. (ரோமர் 13:11)

ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார். ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள். (எபே 5:14-17)

ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம். தூங்குகிறவர்கள் இராத்திரியிலே தூங்குவார்கள்; வெறிகொள்ளுகிறவர்கள் இராத்திரியிலே வெறிகொள்ளுவார்கள். (1தெச 5:6,7)

என்றுதானே சபைகளுக்கு எழுதும்போது எல்லாம் பவுல் அப்போஸ்தலன் எச்சரிக்கிறார்.

விழிப்பு என்பது விழிப்புணர்வையே அழுத்தமாகச் சொல்லுகிறபடியால், சபையில் விழிப்புணர்வைக் கொடுக்கும் வார்த்தைகள் அதிகம் தேவை. பிரசங்க பீடங்களிலிருந்து வெளிப்படுபவை ஜனத்தை உணர்த்துவிக்கவும், விழிப்புணர்வைக் கொடுக்கவும் கூடியதாக மாறவேண்டிய அவசியம் இந்த நாட்களில் அதிகம் தேவை. அவையே சபையை வீறு கொண்டு எழச் செய்யும். வீரர்களையும் வீராங்கனைகளையும் எழுப்பிவிடும். களைகளை பரவவிடாமல் காக்கும் தேவன் அதனைச் செய்வாராக.

சபையை தூங்க வைக்கிறான்
சத்துரு சந்தடியில்லாமல்
ஆவிக்குரிய போர்வையின்
ஆடலில், மூடலில்
ஆழ்ந்த நித்திரையில்
உலகின் மடியிலே

நீதிபரரின் சத்தத்தையும்
நித்திய நினைவினை மறக்கவே
நீதி சரிக்கட்டும் நாளையும்
நினைவில் இருந்து அகற்றிடவே

தூசி தட்டி எழும்பிடுவோம்
தூரம் உண்டு பயணமே
தூக்கம் உதறித் தள்ளியே
தூரப் பார்வை கொண்டோராய்

வேதமின்றி மார்க்கமில்லை
வேதனை நீங்க வழியுமில்லை
போதனைகள் அனைத்துமே
சோதனைக்காரனைக் காட்டிடட்டுமே

விழிப்புணர்வு வீறு கொள்ளச் செய்யும்
களிப்பாட்டம் புறம்பே தள்ளும்
கர்த்தரின் பட்சம் நிற்கச் செய்யும்
கர்ஜனையோடு போர் புரியவே

கருத்துடனே செயல்படுவீர்
கர்த்தரின் சத்தம் தொனிக்கச் செய்வீர்
காலம் இனி செல்லாதே
காத்திடுவோம் அழைப்பதனையே

அன்பரின் அறுவடைப் பணியில்
அன்பு சகோதரர் D. அகஸ்டின் ஜெபக்குமார்

சகாயம் செய்யும் தேவன்

இஸ்ரவேலே, நீ உனக்குக் கேடுண்டாக்கிக்கொண்டாய்; ஆனாலும் என்னிடத்தில் உனக்குச் சகாயம் உண்டு. எனக்கு ராஜாவையும் அதிபதிகளையும் ஏற்படுத்தவேண்டும் என்றாயே; இப்போதும் உன்னுடைய எல்லாப்பட்டணங்களிலும் உன்னை இரட்சிக்கும் ராஜா எங்கே? உன் நியாயாதிபதிகள் எங்கே? நான் கோபத்திலே உனக்கு ராஜாவைக் கொடுத்தேன்; என் உக்கிரத்திலே அவனை எடுத்துக்கொண்டேன். (ஓசியா 13:9 – 11)

ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபோது, ஏதேன் தோட்டத்தை இழந்தது உண்மையே; என்றபோதிலும், "நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள்" (ஆதி 1:28) என்ற ஆசீர்வாதத்தை அவர்கள் இழந்துவிடவில்லை. குடிகாரர்களாக வாழ்ந்துகொண்டிருக்கும் மனிதர்களும் குழந்தைகளைப் பெற்றுக்கொள்கிறார்களே! மனிதர்களை உண்டாகினபோது, "பலுகிப் பெருகுங்கள்" என்று தேவன் கொடுத்த ஆசீர்வாதத்தை மனிதர்களிடமிருந்து பறித்துக்கொள்ளவே இல்லை. அவ்வாறே நம்முடைய நாவின் சுவைகளையும், நுகர்தலையும், தொடுதலையும் மற்றும் பிற சரீர உணர்வுகளையும் பாவம் செய்ததினால் மனிதன் இழந்துவிடவில்லையே. பூக்களை நுகர்ந்து அதன் மணத்தை அறிந்துகொள்ளுகின்றான். எத்தனை பெரிய பாவத்தில் கிடக்கும் மனிதனாயிருந்தாலும், இத்தகைய உணர்வுகளை உடையவனாகவே வாழ்ந்துகொண்டிருக்கின்றான். இந்த காரியங்களினால் மனிதனுடைய அறிவும், புரிந்துகொள்ளுதலும், தெரிந்துகொள்ளுதலும் பெருகுகிறது. தனக்கு தீமை உண்டாக்கும் காரியங்களையும், நன்மை உண்டாக்கும் காரியங்களையும் பகுத்து அறிந்துகொள்ளுகின்றான். இவ்வுலகத்திற்கு அடுத்த அறிவு மனிதனிடத்தில் காணப்பட்டபோதிலும், பாவம் செய்ததினால், தேவனிடத்திலிருந்து வருகிற பரம ஞானத்தை இழந்தவனாகவே மனிதன் காணப்பட்டான்.

தேவனிடத்திலிருந்து வருகிற ஞானமும் உண்டு; அப்படியே, சாத்தானிடத்திலிருந்து வருகிற ஞானமும் உண்டு. எனவே, யாக்கோபு தனது நிருபத்தில், இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது. வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச் செய்கைகளுமுண்டு (யாக் *3:15 – 16*) என்று எழுதுகின்றார். பத்திரமாகப் பாதுகாக்க காவலர்களை நியமித்தாலும்; புத்தியோடு பொருட்களை திருடிச் சென்றுவிடும் திருடர்கள் உண்டே! மதுபானத்தை அரசு தடை செய்தாலும், மறைத்துவைத்துக் குடித்து அதிலேயே மயங்கியிருக்கும் மனிதர்களும் உண்டே! எனவே யாக்கோபு, பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது என்று எழுதுகின்றார். நம்மிடத்திலிருப்பது சாத்தானிடத்திலிருந்து வருகின்ற ஞானமா? அல்லது தேவனிடத்திலிருந்து வருகின்ற ஞானமா? தேவனிடத்திலிருந்து வருகின்ற ஞானமாயிருந்தால், "சமாதானம், சாந்தம், இணக்கம், இரக்கம், நற்கனிகள், பட்சபாதமின்மை, மாயமின்மை" போன்றவை நம்மிடத்தில் காணப்படும்; ஆனால், சாத்தானிடத்திலிருந்து வருமென்றால், "லௌகீக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்திற்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கும்". மனிதன் பாவத்தில் விழுந்ததினால் நடந்தது இதுவே.

இஸ்ரவேல் மக்கள் முழுவதுமாய் சாத்தானுடைய கைகளில் தங்களை விட்டுக்கொடுத்ததினால், தங்களுக்குக் கேடுகளையே வருவித்துக்கொண்டிருந்தார்கள். எனவே ஆண்டவர் இஸ்ரவேலை நோக்கி, "**இஸ்ரவேலே, நீ உனக்குக் கேடுண்டாக்கிக்கொண்டாய்; ஆனாலும் என்னிடத்தில் உனக்குச் சகாயம் உண்டு**" என்று சொல்லுகின்றார்; இதுவே தேவனுடைய அன்பு. திரும்பத் திரும்பத் தவறுகளையே செய்யும் மனிதர்களைக் காணும்போது, மனிதர்களாகிய நமக்கு கோபம் வரக்கூடும்; என்றபோதிலும், தேவனோ, நமக்கு சகாயம் செய்ய விரும்புகின்றார்.

ஒருவேளை மீண்டும் மீண்டும் நாம் பாவத்தில் விழுந்துகொண்டிருக்கலாம்; தேவன் வெறுக்கும் சேற்றுக்குள்ளேயே நாம் வாழ்ந்துகொண்டிருக்கலாம்; எனினும், தேவனோ, நம்மை மீண்டும் தூக்கி எடுத்து, நம்மீது அன்பு பாராட்டவே விரும்புகின்றார்.

LEAD NEXT - தலைமைத்துவப் பயிற்சி

“அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி” (2தீமோ 2:2) என்ற பவுலின் வார்த்தைகளை மனதில் கொண்டவர்களாக,

தலைமைத்துவத்திற்கடுத்த நிலைகளில் தடுமாறாதபடி, கர்த்தர் அளித்த தரிசனத்தை பணித்தளத்திலும் மற்றும் ஊழியத்தின் பல்வேறு முனைகளிலும் தொடர்ச்சியாகத் தக்கவைக்க தங்களையே அர்ப்பணிக்கும் வருங்காலத் தலைவர்களை உருவாக்கும் நோக்கத்துடன் “Lead Next” தலைமைத்துவப் பயிற்சியினை நடத்த கர்த்தர் கிருபை செய்தார். ஹிந்தி மற்றும் ஆங்கில மொழி வழிகளில் இரண்டு ஆண்டுகள் நடைபெற்ற இத்தலைமைத்துவ பயிற்சி வகுப்புகளில், Dr. Vijayakant (Founder and Director of GIFT organization), சகோ. L.T. ஜெயசந்திரன், சகோ. P.K.D.Lee, சகோ. இம்மானுவேல் சந்தீப், சகோ. ராஜ்குமார் ராமச்சந்திரன் மற்றும் ஊழியர்கள் பலர் பயிற்சியாளராகக் கலந்துகொண்டு பயிற்சியளித்தனர். வேதத்தின் அடிப்படையிலும், தங்களது தனிவாழ்வின் அனுபவங்களிலிருந்தும் ஊழியர்கள் அளித்த செய்தியும், பகிர்ந்துகொள்ளுதலும் பங்கேற்றவர்களது அர்ப்பணிப்பின் அஸ்திபாரத்தை மேலும் பலப்படுத்தின. அழைப்பினை அறிந்துகொள்ளவும், அதனை நிறைவேற்ற தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ளவும், பொறுப்பினை அறிந்தவர்களாக சோர்பின்றி செயல்படவும் இப்பயிற்சி வகுப்புகள் ஊழியர்களுக்கு ஊக்கமளித்தது. இறுதிநாளன்று, பிப்ரவரி 22 மற்றும் 28 ஆகிய தினங்களில் டெஹ்ரி ஆன் சோன் பணித்தளத்தில் நடைபெற்ற சான்றளிப்பு நிகழ்ச்சியில், Dr. விஜயகாந், சகோ. L.T. ஜெயசந்திரன் மற்றும் சகோ. P.K.D.Lee ஆகியோர் கலந்துகொண்டு, வசனத்தினாலும் மற்றும் தங்கள் வாழ்க்கையின் அனுபவங்களினாலும் தலைமைத்துவத்தில் தளராமல் தொடர்ந்து ஓடும்படியாக ஊழியர்களை உற்சாகப்படுத்தினர். சகோதரர் அகஸ்டின் ஜெபக்குமார் ஆலோசனைகளையும் சான்றிதழ்களையும் வழங்கி பயிற்சி பெற்ற ஊழியர்களை சிறப்பித்தார். தங்கள் அழைப்பிலே நிலைத்து நிற்கும் தலைவர்களாகவும், ஸ்தாபனத்தின் தரிசனத்தோடு இசைந்து நிற்கும் தலைவர்களாகவும் மாத்திரமல்ல, தலைவர்களை உருவாக்கும் தலைவர்களாகவும் வரும் நாட்களில் இவர்களது வாழ்க்கை விளங்கவேண்டும் என்ற விண்ணப்பத்தோடு இப்பயிற்சி சிறப்பாக நிறைவுற்றது.

Lead Next
தலைமைத்துவப் பயிற்சி
2020.02.20 11:14

LEAD NEXT
A Journey Towards Excellence...
2018-2020

LEAD NEXT

LEAD NEXT
A Journey Towards Excellence...

பணித்தள கிராம ஊழியங்கள்

ஊழியர் உபவாசக் கூடுகை – நேபாள்

பணித்தள கிராம ஊழியங்கள்

பிப்ரவரி 12 முதல் மார்ச் 13 வரை நடைபெற்ற பணித்தள மருத்துவ முகாம்கள், பள்ளி ஊழியங்கள் மற்றும் கிராமப்புற ஊழியங்களின் வாயிலாக நிம்மியாடி, பஞ்சாரி ஆகிய பணித்தளங்களிலுள்ள ஜெம்ஸ் ஹிந்தி வழி பள்ளிகள் மற்றும் பித்தாம்பர்பூர், பஞ்சாரி ஆகிய பணித்தளங்களிலுள்ள அரசாங்க பள்ளிகளில் பயிலும் 990 மாணவர்கள் சந்திக்கப்பட்டனர். மேலும், ஔரங்காபாத், பாரூன் மற்றும் டெஹ்ரி ஆன் சோன் ஆகிய பணித்தளங்களிலுள்ள சுமார் 320 ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதுடன், ஜெம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுச் சென்ற 8 குடும்பத்தினர்களும் சந்திக்கப்பட்டனர். இப்பணித்தள மருத்துவ ஊழியத்தின்போது, பெண் பிள்ளைகளின் பாதுகாப்பு, மதுப்பழக்கத்தினால் தனிப்பட்ட வாழ்விலும், குடும்பங்களிலும், சமுதாயத்திலும் உண்டாகும் தீமைகள், சுகாதாரமான வாழ்க்கைக்கு அடுத்த ஆலோசனைகள் மற்றும் நோய்களிலிருந்து தங்களைத் தற்காத்துக்கொள்ளும் வழிமுறைகள் ஜனங்களுக்குப் போதிக்கப்பட்டதுடன், பாடல்களின் மூலமாகவும், செய்தியின் மூலமாகவும், குறுநாடகங்களின் மூலமாகவும், கைப்பிரதிகளின் மூலமாகவும் கிறிஸ்துவின் அன்பும், இரட்சிப்பின் வழியும் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டது.

ஊழியர் உபவாசக் கூடுகை - நேபாள்

பிப்ரவரி 25,26 மற்றும் 27 ஆகிய தினங்கள், நேபாளின் ஜீத்பூர் பணித்தளத்தில் ஊழியர் உபவாசக் கூடுகை நடைபெற்றது. ஆந்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த போதகர் கிரன், சகோ. மைக்கேல் விஜயகுமார், சகோ. தினேஷ், சகோ. சாகர் மற்றும் ஜெபப் பங்காளர்கள் பலர் இக்கூடுகையில் பங்கேற்றனர். தொடர்ச்சியாக மழை பெய்துகொண்டிருந்தபோதிலும் 150 ஊழியர்கள் இக்கூடுகையில் பங்கேற்றனர். சகோ. விஜய் லாமா, சகோ. ராஜு லாமா, சகோ. பாபு லாமா மற்றும் போதகர் சைலஸ் ஆகியோர் ஆராதனையிலும், ஜெபத்திலும் ஜனங்களை வழிடத்த, சிறப்புச் செய்தியாளர் சகோ. மைக்கேல் விஜயகுமார், திருமதி மைக்கேல் விஜயகுமார் மற்றும் Dr. அசோக் குமார் ஆகியோர் கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்துகொண்டார். சகோ. தினேஷ் தனது வாழ்க்கையின் சாட்சியை ஊழியர்களிடையே பகிர்ந்துகொண்டார்.

பணித்தளச் செய்திகள்

ரோஹ்தாஸ் கோட்டம்

ஏப்ரல் 01 **மானு**

மானு, ஹரையாடோலா, கௌடியாரி, முக்கியாடோலா, கரகாடோலா, பைகாடோலா ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக 60 பேருக்கு புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டன. கடந்த ஒன்றரை வருடமாக சபை விசுவாசிகளுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைக்காமல் இருந்த உதவிகள் தொடர் ஜெபத்தினால் இந்த ஆண்டில் கிடைத்தமைக்காகத் துதியுங்கள். இப்பணித்தளத்தில் சபை ஊழியத்துடன் இணைந்து நலத்திட்டப் பணியும் நடத்தப்படுகிறது. இத்திட்டதின் வாயிலாக 100 மலைவாழ் சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். சிறுவர்களின் பெற்றோருக்கு அறிவிக்கப்படுகிற சுவிசேஷத்தின் வாயிலாக அவர்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

ஏப்ரல் 02 **K – 6**

தில்டியா என்ற புதிய கிராமத்தில் முதன் முதலாக சுவிசேஷம் 150 பேருக்கு அறிவிக்கப்பட்டது. ஞாயிறு வகுப்பில் சிறுவர்கள் உற்சாகமாக கலந்துகொள்கிறார்கள். இப்பணித்தளத்தில் செயல்படுகிற ஹிந்தி மொழி பள்ளி மாணவ மாணவியருக்கு நல்லொழுக்க வகுப்பின் வாயிலாக வசனம்

கற்றுக்கொடுக்கப்படுகிறது. சபையில் திருமுழுக்குப்பெற ஆயத்தமாக இருக்கிற புதிய விசுவாசிகளுக்காகவும், இப்பணித்தள ஊழியரின் தகப்பனாரின் காலில் ஏற்பட்டிருக்கும் காயம் குணமாகவும் மற்றும் ஊழியருடைய குடும்ப உறவினர்களின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 03 திலோகர்

திலோக்கர், படுக்கா, படரியா, சுட்டியா ஆகிய இடங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புதிய ஏற்பாடுகள் விநியோகித்து 250 பேருக்கு சுவிசேஷம் கடந்து சென்றது. கஞ்சன்பூர் பகுதியில் நடத்தப்பட்ட இரவு ஜெபக்கூட்டத்தில் 70 பேர் கலந்து கொண்டார்கள். எந்த வேலையும் செய்யாமல் சோம்பேறியாக சுற்றித்திரிகிற 27 வயது ராஜூகுமாருக்கு தேவன் தெளிந்த புத்தியைக் கொடுக்கவும், இப்பணித்தள ஊழியரின் காய்ச்சல் மற்றும் வாய்வுத்தொல்லை குணமாகவும், அவருடைய மகன் ஜோசுவாவின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 04 மட்டியாவான்

பரவாடிஹ், ரேடியான், சுபாஷ்ராய், கஞ்சன்பூர் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட திறந்தவெளி சுவிசேஷக் கூட்டத்தின் வாயிலாக சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டு 500 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ஊழியர்களுக்கான உபவாசக் கூடுகையில் கலந்துகொண்ட ஊழியர்கள் ஆவிக்குரிய உற்சாகமாகடைந்தனர். பொதுத்தேர்வு எழுதியுள்ள விசுவாசிகளின் பிள்ளைகள் அனைவரும் தேர்ச்சிப்பெறவும், இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகள் நிதேஷ்குமார், அபிஷேக் குமார், ஸ்துதிகுமாரி ஆகியோரின் படிப்பு மற்றும் அவர்களுடைய சரீர சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 05 சதுக்கி

கர்மா, டுமுருகா, சுமுருகா, பட்வனியா, கட்லே, சோடா, குட்முடா, குல்லு, சடுக்கி ஆகிய இடங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு ஆர்முள்ளவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. காலமெல்லாம் கால்வலியினால் பாதிக்கப்பட்டிருந்த கலாவதிக்கு இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது சுகமானார். ராம்சூரத் அசுத்த ஆவியின் கிரியையிலிருந்து விடுதலையானார் துதியுங்கள். ராம்சூரத்சிங் மற்றும் கலாவதிதேவி ஆகியோரின் ஆத்ம இரட்சிப்பிற்காகவும்,

பணித்தள ஊழியரின் சகோதரனுக்கு ஏற்ற வாழ்க்கைத்துணை கிடைக்கவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 06 **தும்பா**

வாராந்திர ஞாயிறு ஆராதனை, ஞாயிறு வகுப்புகள் மற்றும் உபவாசஜெபம் தவறாமல் நடத்தப்பட்டது. வசனத்தைக் கேட்டு மனந்திரும்பிய மனிதாகுமாரி திருமுழுக்குப்பெற்று திருவிருந்து ஆராதனையில் கலந்துகொள்கிறார் துதியுங்கள்! தரம்ஜித் சௌதிரிக்கு முதுகுவலி மற்றும் கண்பார்வை பாதிப்பிலிருந்து சுகம் கிடைக்கவும், இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகள் மற்றும் பெற்றோர்களின் சுகத்திற்காகவும், குடும்ப உறவினர்களின் இரட்சிப்பிற்காகவும் மற்றும் இப்பகுதியில் செயல்பட்டுவருகிற ஜெம்ஸ் ஹிந்தி மொழிப்பள்ளி மாணவ மாணவியர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 07 **உச்சயிலா**

விஷூன்புரா, சாஹ்பூர், நவாடிஹ், மஜிகாவா, தும்பா, ஜமுவா, கோவிந்தாபூர், பேலாபூர், சுந்தர்கஞ்ச், பக்னௌரா, ஜலாலாபாத், பஸ்கரியா, பர்கோலியா, சிவ்பூர், அக்பர்பூர், உச்சைலா ஆகிய 16 இடங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. நவாடிஹ் மற்றும் சுந்தர்கஞ்ச் இடங்களில் குடும்ப உபவாச ஜெபக்கூடுகை நடத்தப்பட்டது. சுதாதேவி, சானோதேவி, சீத்தாமுனிதேவி ஆகியோர் பிசாசின் தொல்லையிலிருந்து விடுதலையாகவும், இப்பணித்தள ஊழியரின் சரீர சுகத்திற்காகவும் மற்றும் மகன் ஜெய்சிங்கின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 08 **நௌஹட்டா**

கஞ்சன்பூர் பகுதியில் நடத்தப்பட்ட இரவு ஜெபக்கூட்டத்தில் 70 பேர் கலந்து கொண்டார்கள். பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக 10 பேர் புதிதாக சபை ஆராதனைக்கு வருகிறார்கள். ஜெபத்தின் உதவியால் நீண்ட நாட்களாக காத்திருந்த சோனிகுமாரிக்கு ஏற்ற வாழ்க்கைத்துணையை தேவன் கொடுத்தமைக்காகத் துதியுங்கள். சபைக்கட்டிடத்திற்கு தேவையான நிலம் சரியான இடத்தில் கிடைக்கவும், இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகள் ஆசிஷ், ஜோதியின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 09 **அதௌரா**

அதௌரா, பிதூரி, கம்ஹரியா, லோஹரா, தாலா, சரயினார், ஏக்டிஹவா, ஜடப்பா ஆகிய கிராமங்களில் 250 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு ஆர்வமுள்ளவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் தொடர்கிறது. சிறுவர் நலத்திட்டத்தின் வாயிலாக படிப்பறிவைப் பெற்றுள்ள இப்பகுதி ஏழை சிறுவர்களுக்காகத் துதியுங்கள். 10 மற்றும் 12ம் வகுப்பு தேர்வு எழுதியுள்ள விசுவாசிகளின் பிள்ளைகள் தேர்ச்சியடையவும் நலத்திட்ட சிறுவர்களுக்காகவும், பணித்தள ஊழியரின் மனைவிக்கு சிறுநீரகத்தில் ஏற்பட்டுள்ள கல்லினால் காணப்படும் வேதனை சுகமாகவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 10 **கூபா**

கூபா, ஜோனா, கப்பர்புட்டி போன்ற இடங்களில் ஞாயிறு ஆராதனை, உபவாசஜெபம், வீட்டுக்கூட்டம் தடையில்லாமல் நடத்தப்படுகிறது. அசுத்தஆவியின் கிரியையினால் பாதிக்கப்பட்ட கீரன் மற்றும் நாகேந்திரன் அம்மா ஆகியோர் ஜெபத்தினால் விடுதலையானார்கள். திருமுழுக்குப்பெற ஆயத்தமாக இருக்கும் சுஜித், சரிதா, முகேந்தர், மித்லேஷ் மற்றும் மகேந்தர், சுரேஷ் தம்பி குடும்பத்தினர் ஆகியோருக்காக ஜெபியுங்கள். இப்பணித்தள ஊழியரின் மகன்கள் ஜாபேஷ், பிரகாஷ் ஆகியோரின் படிப்பிற்காகவும், ஊழிருடைய அம்மா, அண்ணன், அண்ணி, தங்கைகள் ஆகியோர் இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

சிக்கரியா கோட்டம்

ஏப்ரல் 11 **சபை ஊழியம்**

டெஹ்ரிஆன்சோன், கருவந்தியா, தரிகட், பலுவாடி, நிமியாடிஹ், நவாடிஹ், இந்திரபுரி, பிதாம்பர்பூர், பட்டனவாடோலா, டால்மியாநகர் ஆகிய இடங்களில் ஞாயிறு ஆராதனை தடையின்றி தொடர்ச்சியாக நடத்தப்படுகிறது. சுஜான்பூர் கிராமத்தில் 3 நாட்கள் நடத்தப்பட்ட சுவிசேஷக் கூட்டம் வாயிலாக சுமார் 200 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. டெஹ்ரிஆன்சோன் ஆலய ஆராதனையில் சுமார் 120 பேர் கலந்துகொள்கிறார்கள். பலுவாடி மற்றும் சுஜான்பூர் சபைகளில் நடத்தப்பட்ட திருவிருந்து ஆராதனைகளில் 30 பேர் கலந்துகொண்டு கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றார்கள். சிக்கரியா சபையில்

10 பேர் திருமுழுக்கு பெற்றுக் கொண்டார்கள். சுஜான்பூர் மற்றும் பெயின்சா கிராமங்களில் பின்தொடர் ஊழியம் நடைபெற்றது. 200 கைப்பிரதிகளும் 300 புதிய ஏற்பாடுகளும் விநியோகிக்கப்பட்டன. பட்டனவாடோலா சபை ஆராதனை தவறாமல் நடைபெற்றுவருகிறது. விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேறுகிறார்கள். தரிஹட் பணித்தளத்தில் புதிதாக கட்டப்பட்ட ஆலய பிரதிஷ்டை ஆராதனை தடையில்லாமல் நடத்தப்படவும், அனைத்து சபை விசுவாசிகளின் வாழ்க்கையில் ஆவிக்குரிய கனிகள், வரங்கள் வெளிப்படவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 12 — மருத்துவ ஊழியம்

ஜெம்ஸ் மருத்துவமனையில் வெளிப்புற நோயாளிகளாக 3373 பேர் சிகிச்சைப் பெற்று சென்றனர். உள்புற நோயாளிகளாக 90 பேர் தங்கி சிகிச்சைப் பெற்றனர். கண் அறுவை சிகிச்சை முகாம் வாயிலாக 48 பேருக்கு கண்புரை நீக்கப்பட்டது. 292 பேர் கண் சிகிச்சைப் பெற்று சென்றார்கள். நோயாளிகளுக்கும், உடன்வந்திருந்த உதவியாளர்களுக்கும் சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புதிய எற்பாடு வேதாகமங்கள் விநியோகிக்கப்பட்டன. தினமும் நோயாளிகளை பார்ப்பதற்கு முன்பாக பாடல்பாடி சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. நோயாளிகளின் வீடு சந்திப்பு ஊழியத்தின் வாயிலாக சிவ்பூஜன், சரஸ்வதிதேவி, ராஜ்குமார் ஆகியோரது குடும்பங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக 700 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. மருத்துவ ஊழியத்தில் இணைந்து பணியாற்ற அர்ப்பணிப்புள்ள மருத்துவர்கள் கிடைக்கவும், மருத்துவ மனையில் பணிபுரிகிற அனைத்து ஊழியர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 13 — வேதாகமப்பயிற்சி ஊழியம்

ஜெம்ஸ் பயிற்சி துறை வாயிலாக AGM பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. மாதாந்திர குடும்பக் கூடுகை சிக்கரியாவில் நடத்தப்பட்டது. LTC AGNI Workers பயிற்சியில் கற்றுக் கொடுப்பதற்கு கர்த்தர் பயிற்சி ஒருங்கிணைப்பாளரை உபயோகப்படுத்தினார். அக்னி ஊழியர்களின் தலைமைத்துவ பயிற்சி நடத்தப்பட்டது. TBC- Sikaria, TBC-Maharashtra, TBC-Dharbanga ஆகிய வேதகாமக் கல்லூரியில் படிக்கிற மாணவர்களை ஆயத்தப்படுத்தும் பயிற்சியும் நடத்தப்பட்டது. தெபோரா பெண்கள் வேதாகமப் பயிற்சி மையத்தில் புதிய அணியினரை தேர்ந்தெடுக்க நடத்தப்பட்ட

நேர்முகத்தேர்வு வாயிலாக 24 வாலிபப் பிள்ளைகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஜெம்ஸ் ஸ்தாபனத்தின் அடுத்த தலைமைத்துவம் என்ற தலைப்பில் தலைவர்களுக்கான பயிற்சியின் நிறைவு நாள் நிகழ்ச்சியும், பட்டமளிப்பு விழாவும் சிறப்பாக நடத்தப்பட்டது. இத்துறையில் பணிபுரிகிற அனைத்து சகோதரர்களுக்காக ஜெபியுங்கள்.

ஏப்ரல் 14 **கல்விப்பணி ஊழியம்**

ஜெம்ஸ் கல்விப்பணி வாயிலாக பள்ளிகளில் படிக்கிற சுமார் 20000 மாணவ மாணவிகள் ஹிந்தி மற்றும் ஆங்கிலம் மொழி வாயிலாக கல்வி பயின்று வருகிறார்கள். மாணவர்களுக்காக 3 ஐடிஐ மற்றும் மாணவிகளுக்காக ஒரு ஐடிஐ நடத்தப்படுகிறது. தொழில்துறை பயிற்சி நிறுவனத்தின் வாயிலாக 500 மாணவ மாணவிகள் பயனடைந்து வருகிறார்கள். ஜெம்ஸ் பாலிடெக்னிக் கல்லூரியில் படிக்கிற மாணவ மாணவியருக்கு உடனடி வேலைவாய்ப்பு கிடைக்கிறது. செவிலியர்பள்ளியில் படிக்கிற மாணவிகளுக்கு பட்டமளிப்பு, புதிய மாணவிகளுக்கான உறுதிமொழி எடுத்தலுக்கான நிகழ்ச்சியின் வாயிலாக 30 மாணவிகள் உறுதிமொழி எடுத்தார்கள். 30 மாணவிகள் பட்டங்களைப் பெற்றார்கள். மத்திய இந்தியா அனைத்து செவிலியர்பள்ளிலும் ஜெம்ஸ் செவிவியர்பள்ளி 2ஆம் ஆண்டு மாணவி நிர்மலா சோரன் முதல்தரவரிசை பெற்றார். ஜெம்ஸ் அனைத்துப் பள்ளி மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட இருக்கிற விடுமுறை வேதாகம வகுப்பிற்காகவும், இவ்வூழியத்தின் வாயிலாக கர்த்தருடைய வசனத்தையும், சத்திய போதனைகளையும் கேட்டுவருகிற சிறுவர்கள் மற்றும் வாலிபர்கள் வாழ்க்கையில் தேவன் கிரியை செய்யவும் ஜெபியுங்கள்.

சிறுவர்துறை ஊழியங்கள்

ஏப்ரல் 15 **முஸஃபர்பூர்**

கமரியாவில் ஞாயிறு பள்ளியில் சுமார் 144 பிள்ளைகளுக்கு பாடல், கதை, வசனம் கற்றுக்கொடுக்கப்பட்டது. லவாலாவில் அக்சய், நிக்கில் ஆகியோரின் உதவியுடன் பொம்மலாட்டம் வாயிலாக சுமார் 110 பிள்ளைகளுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ஜூனியர் கிளப் வாயிலாக சபைகளில் எழுப்புதல் உண்டாகவும்,

பிள்ளைகளின் பெற்றோர் இயேசுவை ஏற்றுக்கொள்ளவும், இப்பணித்தள ஊழியருடைய குடும்ப உறுப்பினர்களின் சீர ஆரோக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 16 **மதுபனி**

கஷ்நரைனி, முஷகர்டோலா ஆகிய கிராமங்களில் சுமார் 150 பிள்ளைகள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. கஷ்நரைனி கிராமத்தில் முஷகார் பிள்ளைகள் மத்தியில் நிகழ்ச்சிகள் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதினிமித்தமாக பெரியவர்களும் தொடப்பட்டதற்காகத் துதியுங்கள். வருகிற நாட்களில் நடைபெறவிருக்கிற விடுமுறை வேதாகமப்பள்ளி இயக்குநர்களுக்கான பயிற்சி வகுப்புகளுக்காகவும், பணித்தள ஊழியரின் சீர ஆரோக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள்,

ஏப்ரல் 17 **கஃர்டுவா**

மேரால் கிராமத்தில் தனியார் பள்ளியில் படிக்கும் சிறுவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதில் சுமார் 250 பிள்ளைகள் வசனத்திற்கு செவிகொடுத்தனர். தசரார் பாதுகாப்பு மையத்தில் 4 பிள்ளைகள் ஜெபக்குழு நடத்துவதற்கு முன்வந்து தங்களை அர்ப்பணித்துள்ளனர் துதியுங்கள்! புதிய கிராமங்களில் நற்செய்தி குழு தொடங்கவும், இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகளின் படிப்பிற்காகவும், அவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கைக்காகவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 18 **மோத்திகாரி**

7 நற்செய்தி குழுவில் உள்ள சுமார் 235 பிள்ளைகளுக்கு கதை, வசனம் வாயிலாக கிறிஸ்துவின் அன்பு வெளிப்பட்டது. போதைப்பழக்கத்திற்கு அடிமையாயிருந்த கிளப் தலைவர் ராமுவின் அண்ணன், பிள்ளைகளின் தொடர் ஜெபத்தால் சபை ஆராதனைகளில் தவறாமல் கலந்துகொள்கிறார் துதியுங்கள்! இப்பகுதியில் உள்ள எல்லா சபைகளிலும் ஞாயிறு பள்ளி தடையில்லாமல் நடைபெறவும், இப்பணித்தள ஊழியருடைய வயதான தாயாரின் சீர சுகத்திற்காகவும், ஊழியரது காலில் தொடர்ந்து காணப்படும் கால் வலி பூரணமாக சுகமாகவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 19 **தும்பா**

கர்மா, பச்சஸ்வா, கமரியா ஆகிய பகுதிகளில் சிறுவர்கள் மத்தியில் வசனங்கள் விதைக்கப்பட்டது. இப்பணித்தளத்தில் செயல்படுகிற ஜெம்ஸ் பள்ளி மாணவ மாணவியருக்கு நீதி போதனை கதைகள் கற்றுக்கொடுக்கப்படுகிறது. இப்பகுதியில் உள்ள மதவாத சக்திகளின் ஆதிக்கம் செயலிழக்கவும், சிறுவர் ஊழியத்தின் வாயிலாக பெரியவர்கள் வாழ்க்கையில் தேவன் கிரியை செய்யவும், நற்செய்தி குழுவில் புதிதாக சிறுவர்கள் சேரவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 20 **ரோஹ்தாஸ்**

கரம்டிஹா, கோவிந்தாபூர், சாஹ்பூர், நவாடிஹ் ஆகிய கிராமங்களில் நடத்தப்படுகிற நற்செய்தி குழு வாயிலாக பிள்ளைகள் மத்தியில் ஊழியம் செய்யப்பட்டது. சுமார் 470 பிள்ளைகள் தேவனுடைய வசனமாகிய வெளிச்சத்தில் நடத்தப்படுகிறார்கள். கிராமங்களில் நடைபெறும் சிறுவர் ஊழியத்தின் வாயிலாக சிறுவர்கள் ஆவியின் வரங்களை பெறவும், இப்பணித்தளத்தில் கர்த்தர் ஊழியரை வல்லமையாய் பயன்படுத்தவும், ஊழியரின் குடும்பத்தாரின் ஆத்தும இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 21 **சிக்கரியா**

சிறுவர் ஊழியத்தின் தலைமை அலுவலகம் இப்பணித்தளத்தில் செயல்படுகிறது. இந்த ஆண்டின் விடுமுறை வேதாகம வகுப்பிற்காக ஆயத்த வேலைகள் நடைபெறுகிறது. சுமார் 50000 சிறுவர்கள் மத்தியில் ஊழியம் செய்வதற்கான இலக்கு வைக்கப்பட்டுள்ளது. சிக்கரியா வளாகத்தில் காப்பக பிள்ளைகளுக்கு நடத்தப்பட்ட 3 நாட்கள் சிறப்புக் கூடுகையில் 46 காப்பகங்களிலிருந்து சுமார் 800 பிள்ளைகள் கலந்துகொண்டனர். சிறுவர் துறையில் பணிபுரியும் சகோதரி. காயத்ரியின் திருமணம் சிக்கரியா வளாகத்தில் சகோ. அகஸ்டின் ஜெபக்குமார் அவர்கள் தலைமையில் சிறப்பாய் நடைபெற்றது துதியுங்கள்.! குடும்பக் கூடுகையில் கலந்துகொண்ட ஊழியர்களின் குடும்பங்களில் தேவனது கிருபை பெருகவும், தலைமை அலுவலகத்தில் பணி செய்கிற அனைத்து ஊழியர்களுக்காகவும், அவர்களுடைய குடும்பத்தினருக்காகவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 22 **ஜப்லா**

சைதாபாத் நற்செய்தி குழு பிள்ளைகள் மத்தியில் பாடல், கதை கற்றுக்கொடுக்கப்பட்டது. புதிய இடங்களில் நற்செய்தி குழுக்கள் ஆரம்பிக்கப்படவும், ஜப்லாவிலுள்ள புரேந்திர பீஹாவில் ஊழியத்திற்கு விரோதமாய் எழும்பும் மக்களை தேவன் சந்திக்கவும், சுற்றுலா தலமாக இருக்கிற இப்பகுதிக்கு வருகிற மக்கள் மத்தியில் சுவிசேஷம் தடையில்லாமல் சென்றடையவும், தனது தாயாரின் மரணத்தால் மனச்சோர்வுடன் இருக்கிற இப்பணித்தள ஊழியரின் குடும்பத்தினரின் ஆறுதலுக்காகவும், அவரது சகோதரர்கள் இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 23 **பபுவா**

கம்தௌரா, பதௌலா, சௌசா, முஜான், மதுர்னா ஆகிய இடங்களிலுள்ள பாதுகாப்பு மையங்களில் பிள்ளைகளுக்கு பாடல், வேதாகமக் கதைகள் கற்றுக்கொடுக்கப்பட்டது. பாதுகாப்பு மையத்தில் படிக்கும் மாணவன் சூரஜ்குமார் ஜெபத்தினால் சீர சுகம் பெற்றான் துதியுங்கள்! இப்பணித்தளத்தில் செயல்படுகிற ஜெம்ஸ் ஆங்கிலப்பள்ளியில் தொடர்ந்து நடத்தப்படுகிற ஞாயிறு பள்ளி கூடுகைக்காகவும், கிராமங்களில் கிரியை செய்யும் சத்துரு போராட்டம் மாறவும், புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு பட்னாவில் சிகிச்சை பெற்று வரும் ஊழியருடைய தகப்பனாரின் பூரண சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 24 **கோடர்மா**

இம்மாதம் பேலாடாட் என்ற பகுதியில் 2 அரசாங்கப்பள்ளிகளில் படிக்கும் 325 பிள்ளைகளுக்கு பாடல், கதை வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பள்ளியில் உள்ள ஆசிரியர்களின் ஒத்துழைப்புக்காகவும், சுவிசேஷத்தை ஆர்வமாக கேட்டமைக்காகவும் துதியுங்கள்! திலையா கிராமத்தில் நடைபெறும் நற்செய்தி குழுவுக்காகவும், சாந்திகுமாரி, பிரியங்கா ஆகியோரின் எதிர்கால தேவ திட்டத்திற்காகவும், இப்பணித்தள ஊழியரின் மகள் கிரேஸி மற்றும் ஊழியரின் குடும்பத்தினரின் சீர ஆரோக்கியத்திற்காகவுயும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 25 **நாத்பூர்**

பாதுகாப்பு மையத்தில் பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் காலை தியானம் நடத்தப்பட்டது. மேலும் பிள்ளைகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. அரசுப் பள்ளி மாணவர்கள் மத்தியில் வேதாகம கதைகள் வாயிலாக சுவிசேஷம் சென்றடைந்தது. நற்செய்திக் குழுவில் கலந்துகொள்கிற சிறுவர்கள் வசனத்தில் தேறிவருகிற கிருபைக்காகத் துதியுங்கள். நம் மக்கள் நலத்திட்டத்தின் வாயிலாக பராமரிக்கப்படுகிற பிள்ளைகளின் பெற்றோர் இயேசுவை ஏற்றுக்கொள்ளவும், இப்பணித்தள ஊழியரின் வயதான பெற்றோரின் சீர ஆரோக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

பகல் பாதுகாப்பு மைய ஊழியங்கள்

ஏப்ரல் 26 **நைக்கி**

இப்பணித்தளத்தில் செயல்படுகிற பகல் பாதுகாப்பு மையத்தில் படிக்கிற மாணவர்களுக்கு காலை தியானக் கூடுகை நடத்தப்படுகிறது. ஞாயிறு ஆராதனை, சிறுவர் ஊழியம், வீடுசந்திப்பு ஊழியம் தவறாமல் நடைபெற்றது. 110 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. நைக்கி கிராம மக்கள் மத்தியில் குடிப்பழக்கம் மாறவும், தினேஷ் சகோதரனின் மனந்திரும்புதலுக்காகவும், இம்மையத்தில் படிக்கிற அனைத்து மாணவ மாணவிகள் நன்றாக படிக்கவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 27 **பெலாவன்**

லேவாபாந்த், அமாவ், பித்ரிபாந்த், மோரியா, டிகுரி, நௌஹட்டா, பசாயி, கங்காபூர் ஆகிய 8 கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. வார நாட்களில் மாணவர்களுக்கு பாடங்கள் தவறாமல் நடத்தப்படுகிறது. ரோகிராம், யமுனாராம், ராம்கேசரிராம் ஆகியோர் புதிதாய் சபை ஆராதனையில் கலந்துகொண்டதற்காகத் துதியுங்கள். புதிய கல்வியாண்டில் பள்ளியில் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரிக்கவும், கடந்த 6 மாதங்களாக பிசாசின் பிடியிலிருக்கிற இப்பணித்தள ஊழியரின் சகோதரனின் மகள் விடுதலையாகவும், ஊழியருடைய பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 28 **சாத்பஹனி**

லாவா, காடிகிராம், ஜோர்சா, திதி, பவன்பூர், பட்மதா ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. பாதுகாப்பு மைய பிள்ளைகளுக்கு காலை தியானத்தில் கர்த்தருடைய வார்த்தை கற்றுக்கொடுக்கப்பட்டதோடு 46 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டன. அரசாங்கத்தின் வாயிலாக பள்ளியிலும் கிராமத்திலும் மருத்துவமுகாம் நடைபெற்றதற்காகத் துதியுங்கள். கிராம மக்கள் மத்தியில் காணப்படும் மூடப்பழக்க வழக்கங்கள் மாறவும், புதிய கல்வி ஆண்டில் மாணவர் சேர்க்கை அதிகமாகவும், இப்பணித்தள ஊழியரின் வயதான தாயாருக்காகவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 29 **மகதம்பூர்**

டக்னிபீஹா, சைத்பூர் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டு பிள்ளைகளின் பெற்றோர்களும் சந்திக்கப்பட்டார்கள். ராஜ்மனிதேவியின் மண்வீடு மழை பெய்த போது கீழே விழுந்துவிட்டபொழுதிலும் சகோதரிக்கு எந்த சேதமும் இல்லாமல் தேவன் பாதுகாத்தமைக்காகத் துதியுங்கள்! பிள்ளைகள் மத்தியில் சொல்லப்படும் வசனங்கள் பலன் தரவும், சிவ்ராஜ், ரீத்தாதேவி இருவரின் மத்தியில் காணப்படும் பிரிவினை மாறி ஒற்றுமை உண்டாகவும், இப்பணித்தள ஊழியரின் மகனுடைய வாழ்க்கையில் காணப்படும் ஆவிக்குரிய போராட்டங்கள் மாறவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் 30 **மஜ்ஹௌலி**

பனிகாடோலா, கௌராடோலா ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள், புத்தகங்கள், புதியஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டன. புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டமைக்காகத் துதியுங்கள். கிராம மக்கள் மத்தியில் கல்வியைக் குறித்ததான விழிப்புணர்வு உண்டாகவும், அஜித்ராம், ஜெய்குமார் ஆகியோருக்கு கண்களில் காணப்படும் குறைபாடுகள் குணமாகவும், இப்பணித்தள ஊழியரின் இடுப்பில் உள்ள வலி சுகமாகவும், ஜெபியுங்கள்.

GEMS Action Centers

Chennai	No. 8, 3rd Jeevan Nagar, Adampakam, Chennai - 600088 Ph. 044-22670099
Coimbatore	No.2, Anbu Nagar, 4th Street, Vadavalli Road, Edayarpalayam, Coimbatore - 641025 Mobile : 9344824072
Dindugal	43/20C. Samiyar Thottam, Nagal Nagar, Dindugal - 624003 Cell : 9942824035
Erode	No. 34/20, Murugesan Nagar Main Road, Kumalankuttai, Erode - 638011 Cell: 9486976202
Kodaikanal	No. 1/199-1F, Packiapuram, Kodaikanal - 624101. Cell : 9443221776
Kovilpatti	No 11, Theppakulam street, Kovilpatti - 628501, Ph. : 04632-225890, 9944755640
Marthandam	N.S.Building, Kulasekaram Road, Marthandam, K.K. Dist., - 629165 Cell : 9788689771, 9486357950
Nazareth	No. 3, Dasan street, Nazareth - 628617, Ph. : 9442094110
Nagercoil	66-E, Bright street, Nagarcoil - 629001 Cell : 9894965520
Salem	1/40, Mugil Nagar 4th Cross, Indian Bank Colony, Narasothipatty, Salem - 636004 Cell: 9442337027
Sivakasi	3/1350/9, Sathur Road, Parraipatti, Sivakasi - 626189 Cell : 9843088840
Tuticorin	38, Sarangapani street, Tuticorin - 2, Cell : 9442210629
Tuticorin	39, Innaciyarpuram, 2 nd Street, Tuticorin - 628002 Cell : 9442166061
Vellore	Shalom Cottage, 52, Vana Nagar, Alamelumangapuram, Vellore - 632009 Cell : 9952545181

REGIONAL ACTION CENTERS

Chennai	Plot No. 19-A, 3rd street, Megala Nagar, Vengaivasal - 600073, Cell : 9444763141
Coimbatore	No. 7, Laxmi puram, 1st Cross, EB Colony, TVS Nagar, Coimbatore - 641025 Cell : 9442934613
Trichy	Mahanaim, 1, Abdul Gazoor street, Kajah Nagar - 620020 Cell : 9443555577
Tirunelveli	14/109A, 10th Street, Shanthi Nagar, Palayamkottai - 627002 Cell: 9443113322

General Action Center - TamilNadu

GEMS, No. 14/1, Jeba Nagar, Vasanthapuram South, Near Vijaya Garden,
Tirunelveli - 627005 Email : nellaioffice@gemsbihar.org Mobile : 9488771655

Promotional Coordination Center - TamilNadu

No. 21, Sharon Church Street, Booman Nagar, Madurai-625018
Email : tnpromotions@gemsbihar.org Mobile : +919865583563

OTHER STATE ACTION CENTERS

Bangalore	No. B-9, Gogappa Layout, Near Railway Gate, K G Halli, A C Post, Bangalore - 560045 Tel: 9448517025
Mumbai	Gala B-47, 2nd Floor, Sharad Industrial Estate, Lake Road, Near Bhandup Police Station, Mumbai - 400 078 Cell : 9322730294, 02225949999
Pondicherry	No. 22, 2nd Floor, 2nd cross, Perumal Raja Garden, Reddiyar Palayam, (opp. SBI Bank), Pondicherry - 605010 Cell : 8521577762
Kerala	No. 4, N.V. Nagar, Peroorkada (P.O), Trivendram, Kerala - 682005 Mobile : 9486357950

GEMS National Action Center

No: 29, Church street 1st Cross, Near Simpolo Tiles shop,
Kalkere Main Road, Horamavu, Bangalore -560043
Tel: +91 9443429735 E-Mail : promotions@gemsbihar.org

Regd. office :
GEMS Educational and Media Services
11,13th Cross Street, New Colony,
Chrompet, Chennai - 44
Ph : 044-22386031, 044-22380295

Field. office :
GEMS, Sikaria, Indrapuri - 821 308
Rohtas Dist., Bihar. Ph. : 06184 234567
(Railway station & couriers centre : Dehri-on-Sone)
Website : www.gemsbihar.org.
E-mail : gems@gemsbihar.org

If undelivered please return to

GEMS Action Center
14, Jeba Nagar,
Vasanthapuram South,
Near Vijaya Garden,
Tirunelveli - 627 005. Ph : 9488771655
E-Mail : nellaioffice@gemsbihar.org

To

....

....

....

....

Private circulation

தனிப்பிரதி ரூ10-
ஆண்டு சந்தா ரூ100-